மனனம் செய்ய
இந்த வார வசனம்:

“ஒருவர் என்னுடனும், நான் அவருடனும் இணைந்திருந்தால், அவர் மிகுந்த கனி தருவார்”

(யோவான் 15:5)

யோவான் 13: 34-35 நற்செய்தியில் இயேசு இவ்வாறு கூறுகிறார்; “ ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்” என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்” இன்னும் தொடர்ந்து “தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை” என்று கூறுகிறார் (யோவான்: 15:13)

இது ஒரு மிகவும் உயர்ந்த கட்டளை. தம் நண்பர்களுக்காக ஒருவர் எப்படி உயிரை அர்ப்பணிக்க இயலும்? இருந்தபோதும் நம்முடைய நம்பிக்கையினாலே இயலும்; நம்முடைய வரம்புகளை அறிந்த கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பது நமக்குத் தெரியும். உரோமையர்: 3:23-24 ல் புனித பவுல் கூறுகிறார்: “ ஏனெனில் எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். ஆயினும் அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர்” இன்றைய நற்செய்தி இன்னும் அடுத்த நிலைக்கு நம்மை இட்டுச் செல்கிறது. தனிநபராகவோ, சமூகமாகவோ என்ன செய்தாலும், கிறிஸ்துவை மையமாக வைத்து செயல்பட நம்மை அழைக்கிறது. நாம் இயேசுவை விட்டுப் பிரிந்தோமென்றால், நம்மால் எதுவும் செய்ய இயலாது. (யோவான்: 15:5)

நாம் இயேசுவை மையமாகக் கொண்டிருந்தால், நமக்கிருக்கும் கொடைகளைப் பயன்படுத்தி, கடவுளின் அரசை முன்னேற்றும் வகையில் நற்கனிகளை நம்மால் தரமுடியும். இம்முயற்சிக்கு தேவையானவை: அர்ப்பணிப்பு, துணிவு, சகிப்புத் தன்மை மற்றும் இரக்கம் ஆகியவை. இவையே பிறருக்கு உதவி செய்ய நம்முடைய இறுதி இலக்காக அமைய வேண்டும். நாம் காட்டும் அன்பினால், உலகம் நம்மை கிறிஸ்துவர்கள் என்று அறிந்து கொள்ளும். “ கடவுளோடு இருந்தால், எல்லாம் இயலும்” (மத்தேயு: 19:26)

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்காமல் நம்மைச் சார்ந்திருந்தால், நம்மிலும் நம்முடைய பங்குத் தலைவர்களிடமும் கருத்து வேறுபாடுகள், சண்டைச் சச்சரவுகள் தோன்றி, இதனால் நம்முடைய திறன்கள் அனைத்தும் வீணாகும். இவை வீணான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி, சமூகத்தில் ஒற்றுமையை சீர்குலைத்துவிடும். அமெரிக்க காங்கிரஸ் மாநாட்டில் திருத்தந்தை இவ்வாறு உரையாற்றினார். “நாம் எவ்வாறு நடத்தப்பட விரும்பும் ஆர்வத்தோடு இருக்கிறோமோ அதையே பிறருக்கும் பயன்படுத்துவோம். நாம் பிறரை அளக்கும் அதே அளவுகோல் தான் பின்னாளில் நம்மையும் அளக்கும் அளவுகோலாக இருக்கும்

இந்த ஈஸ்டர் காலத்தில், நீங்கள் யாராக இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ, அதற்காக கடவுள் உங்களில் இருந்து செயல்படட்டும். அதே நேரத்தில் பிறரிடம் நீங்களும் கிறிஸ்துவைப் போல் செயல்படுங்கள். ✤

### இன்றைய வாசகங்கள்:

திரு.பணி 9: 26-31
திருபாடல் 22: 26-27, 28, 30-32
1 யோவான் 3: 18-24
யோவான் 15: 1-8

INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

2 மே 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 5 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:
**நன்மையிலும் மற்றும் சோதனை நாட்களிலும் ஒன்றித்திருப்பது**

## நீங்கள் யாராக இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறாரோ அவ்வாறு இருங்கள்

கிறிஸ்துவர்கள் பெரும்பாலும் நம்முடைய பெயர்களால் அல்ல, நம்முடைய செயல்களால் தீர்மானிக்கப்படுகிறார்கள். அவ்வாறு தீர்மானிக்கப்படும்போது பிறரை அளக்கும் அளவுகோலைவிட நீளமான அளவுகோலைப் பயன்படுத்துகிறார்கள். அது ஏன்? இது நியாயமற்றது என்று தோன்றலாம். ஆனாலும், கிறிஸ்துவால் நிர்ணயிக்கப்பட்ட தரமும் இது தான். அவர் சொன்னபடி செய்தார். அவருடைய சீடர்களும் அதுபோல இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.




